**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02 ம் நாள் செவ்வாய்கிழமை**

**I.A.No.01/2025**
**in**
**O.S.No.220/2019**

இராமநாதன் வகையறா ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

மேலாளர், ஸ்ரீராம் சிட்டி
யூனியன் பைனான்ஸ் லிட்,
தலைமை அலுவலகம்,
சென்னை வகையறா .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 20.08.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.Y.T.அன்சாரி அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.காளீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

3 ம் பிரதிவாதி கார்த்திகேயன் மற்றும் 1 ம் வாதியின் வங்கி கணக்கின் வரவு செலவு பட்டியலை சாயல்குடி TMB வங்கி கிளை மேலாளர்

நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க உத்தரவிடக்கோரி கட்டளை 16 விதி 1(3) சி.பி.சி.-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>

வழக்கானது வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், கூடுதல் ஆவணங்களாக 1, 2ம் பிரதிவாதிகள் வழங்கிய காசோலை கடந்த 11.10.2018ம் தேதி 3ம் பிரதிவாதியின் வங்கியில் செலுத்தப்பட்டு 3ம் பிரதிவாதி வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதை நிரூபணம் செய்யும் வகையில் 3ம் பிரதிவாதியின் கணக்கு எண்.052150050800263 என்ற கணக்கையும், 1ம் வாதியின் கணக்கு எண்.052100050304364 என்ற கணக்கின் வரவு செலவு பட்டியலுடன் ஆஜராகி சாயல்குடி TMB வங்கி கிளை மேலாளரை சாட்சியம் அளிக்க உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.</u>

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அபிடவிட்டில் கண்டுள்ள விபரங்கள் ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், மனுதாரர்கள் தரப்பு கூடுதல் ஆவணங்களாக வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் வழங்கிய காசோலை 3ம் பிரதிவாதியின் வங்கி கணக்கில் கடந்த 11.10.2018ம் தேதி செலுத்தப்பட்டு 3ம் பிரதிவாதி வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே எதிர்வழக்குரையில்

ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கானது வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் 1, 2 பிரதிவாதிகள் வழங்கிய காசோலை 3ம் பிரதிவாதியின் வங்கி கணக்கில் கடந்த 11.10.2018ம் தேதி செலுத்தப்பட்டு 3ம் பிரதிவாதி வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதை நிரூபணம் செய்யும் வகையில் 3ம் பிரதிவாதி, 1ம் வாதியின் வங்கி கணக்கின் வரவு செலவு பட்டியலுடன் ஆஜராகி சாயல்குடி TMB வங்கி கிளை மேலாளரை சாட்சியம் அளிக்க உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி சங்கதிகள் குறித்து ஏற்கனவே எதிர்வழக்குரையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதே தவிர வேறு ஆட்சேபனைகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் சாட்சியாக சாயல்குடி TMB வங்கி கிளை மேலாளரை விசாரணை செய்து ஆவணங்களை குறியீடு செய்வதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பினருக்கு எந்தவொரு பாதகமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும், மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்பதால் மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

**மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 02.09.2025 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2025.09.02 14:58:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**</u> இல்லை

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**</u> இல்லை

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2025.09.02 14:58:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.01/2025
**in**
O.S.No.220/2019

Date: 02.09.2025
IA order